# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4
# முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## வணிகக்கல்வியும் கணக்கீடும் I

## தரம் - 11

சுட்டெண்:................................ நேரம் : 1 மணி

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் நீங்கள் தெரிவு செய்த விடைக்குரிய எண்கள் மேல் (**X**) என்னும் அடையாளமிடுக.

01. மனிதர்களது தேவை விருப்பங்களை நிறைவு செய்வதற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து விநியோகம் செய்தல் தொடர்பான பொருளாதார நடவடிக்கை எவ்வாறு அழைக்கப்படும்.
    1) வியாபாரம் 2) வணிகம் 4) வர்த்தகம் 4) உறபத்தி
02. பின்வருவனவற்றுள் எது அரசியற் சூழலாக கருதப்படும்.
    1) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
    2) உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள்
    3) அன்னியச் செலாவணி மாற்று வீதம்
    4) நனோ (Nano) தொழிநுட்ப அறிமுகம்
03. வணிகமொன்றில் காணப்படும் வாய்ப்புகளுக்கு ஓர் உதாரணமாகக் கூறக்கூடியது.
    1) முகாமையாளர்களின் அனுபவங்கள்
    2) நவீன தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படாமை
    3) அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன் முறைகளை அறிமுகப்படுத்தல்
    4) சர்வதேச வர்த்தக கட்டுப்பாடுகளை விதித்தல்
04. இலாபநோக்குள்ள பொதுத்துறை வணிகமாக அமைவது.
    1) அரச கம்பனி 2) கூட்டுறவு 4) பங்குடைமை 4) சங்க வகைகள்
05. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய இலாப நோக்கம் உடைய தனியார் துறை வணிக அமைப்பு
    1) தனியாள் உரிமை 2) பங்குடமை
    3) கூட்டுறவு 4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
06. போக்குவரத்தின் அடிப்படை அம்சம் அல்லாத காரணி எது?
    1) பாதை 2) சக்தி 3) வேகம் 4) தரிப்பிடம்
07. நிறுவனம் ஒன்றினுள் உள்ள தரப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்.
    1) கடிதம் 2) தொலைக்காட்சி 3) தொலைநகல் 4) சுற்றறிக்கை
08. மொத்த வியாபாரத்தையும், சில்லறை வியாபாரத்தையும் வேறுபடுத்தும் பிரதான அம்சம்.
    1) பொருட்களின் வகை 2) வழங்கப்படும் வியாபார கழிவு
    3) பொருட்களின் விலை 4) கொள்வனவு செய்தலின் நோக்கம்
09. நுகர்வோருக்குத் தேவையான பொருட்கள், சேவைகளை விநியோகிப்பதில் ஈடுபடும் இடைநடுவர்கள்
    1) உற்பத்தியாளர், முகவர்,
    2) உற்பத்தியாளர், மொத்த வியாபாரி
    3) மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி

4) சில்லறை வியாபாரி, உற்பத்தியாளர்

10. நிலையான பாரியளவிலான சில்லறை வியாபாரத்திற்கு உதாரணம்

1) வாராந்தச் சந்தை 2) சிறப்புச் சந்தை

3) நடமாடும் வியாபாரம் 4) கூவி விற்கும் வியாபாரம்

11. காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை செய்யக்கூடிய கணக்கு

1) சேமிப்பு கணக்கு 2) நிலையான வைப்பு கணக்கு

3) நடைமுறைக் கணக்கு 4) முதலீட்டு சேமிப்பு கணக்கு

12. காசோலைகளில் காந்தமைப் பகுதியில் காணப்படும் எண்தொகுதிகளில் இறுதியாகக் காணப்படும் எண்தொகுதி

1) காசோலை இலக்கம் 2) வங்கியின் இலக்கம்

2) வங்கிக் கிளையின் இலக்கம் 4) வங்கிக் கணக்கின் இலக்கம்

13. பின்வருவனவற்றுள் ஆகக்கூடிய பாதுகாப்பான குறுக்கு கோடிடல் எது?

1) 2) 3) 4)




14. சம்பத் வங்கியினால் வழங்கப்படும் வரவட்டை எவ்வாறு அழைக்கப்படும்

1) SET 2) PET 3) CEY NET 4) GET SUPER

15. ஆயுள் காப்புறுதிக்கு பொருந்தாத தத்துவம்

1) காப்புறுதி செய்யத்தக்க உரிமை 2) இழப்பீட்டுத் தத்துவம்

3) உயர் நம்பிக்கைத் தத்துவம் 4) காப்புறுதி செய்தகு நலன்

16. காப்புறுதி ஒப்பந்தத்தில் தொடர்புபடும் இரு பிரிவினர்களில் காப்புறுத்துவோனாக அழைக்கப்படுபவர்

1) காப்புறுதி செய்தவர் 2) 3 ஆம் பிரிவினர்

3) 1 ஆம் பிரிவினர் 4) காப்புறுதிக் கம்பனி

17. இலங்கையில் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய சம்பவங்கள்

A. கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தல்

B. கிராம பிரதேசங்களில் காணப்படம் சீரற்ற பாதைகளைத் திருத்தல்

C. கிராமப் பிரதேசங்களில் போக்குவரத்து செய்வதற்காக சிறிய பேரூந்து வண்டிகள் 200 ஐ இறக்குமதி செய்தல்.

D. டீசல், பெற்றொல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலையைக் குறைத்தல்

மேலே தரப்பட்ட நிகழ்வுகளுக்குரிய பொருத்தமான போக்குவரத்து அடிப்படை மூலகங்கள் முறையே.

1) பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம்

2) சக்தி, ஊடகம், பாதை, தரிப்பிடம்

3) தரிப்பிடம், பாதை, ஊடகம், சக்தி

4) ஊடகம், சக்தி, தரிப்பிடம், பாதை

18. திட்டமிடப்பட்ட செயன்முறையை அமுல்படுத்தும்போது பொருத்தமான வழியில் மனித வளங்களுக்கு வழிகாட்டும் செயன்முறை முகாமைத்துவத்தின் எந்த செயன்முறையைக் குறிப்பிடுகின்றது.

1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) நெறிப்படுத்தல் 4) கட்டுப்படுத்தல்

19. உற்பத்தி நிறுவனங்களினால் விளம்பரங்களை மேற்கொள்ளல் நடவடிக்கை எந்த சந்தைப்படுத்தல் கலவையின் மாறியைக் குறிப்பிடுகின்றது.

1) உற்பத்தி பொருள் 2) விலை 3) இடம் 4) மேம்படுத்தல்

20. பின்வருவனவற்றுள் எது சந்தைப்படுத்தலுக்குரிய நடவடிக்கையாக கருத முடியாது.

1) பொருள்கள், சேவைகளை உருவாக்குல்

2) நியாயமான விலையொன்றைக் குறித்தல்

3) விற்பனையின் பின்னர் தேவையான வசதிகளை வழங்கல்

4) ஊழியர்களைத் திரட்டுதல்

21. மூலப்பதிவேட்டையும் அதில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல ஆவணத்தையும் சரியாகக் காட்டும் விடை எது?

1) காசேடு – பட்டியல்

2) கொள்வனவு நாளேடு – கிரய பட்டியல்

3) விற்பனை நாளேடு – கைச்சாத்து

4) சில்லறைக் காசேடு – பட்டியல்

22. வரவு மீதியை காட்டும் கணக்குகள்

1) சொத்து கணக்கு, செலவீனக்கணக்கு

2) பொறுப்பு கணக்கு, உரிமைக் கணக்கு

3) வருமானக் கணக்கு, பொறுப்பு கணக்கு

4) பொறுப்பு கணக்கு, சொத்து கணக்கு

23. பொருள்களின் பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்கப்படும் கழிவு எவ்வாறு அழைக்கப்படும்.

1) வியாபாரக் கழிவு 2) கணியக் கழிவு 3) காசுக் கழிவு 4) கொடுத்த கழிவு

24. இரட்டைத் தொழிற்பாட்டை நிறைவேற்றும் முதன்மை ஏடு பின்வருவனவற்றுள் எது?

3) விற்பனை நாட்குறிப்பு 2) கொள்வனவு நாட்குறிப்பு

3) காசேடு 4) பொதத்தினசரி

25. சொத்துக்களில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருவனற்றுள் எது?

1) கடனுக்கு பண்டங்கள் கொள்வனவு

2) வங்கிக்கடன் பெற்றது

3) தளபாடம் உடன் காசிற்கு கொள்வனவு

4) உரிமையாளர் ஈடுபடுத்தி மூலதனம்

26. வரையறுத்த சுனில் கம்பனி நிறுவனப் பயன்பாட்டிற்காக ரூ.60000 பெறுமதியான 4 கணினிகளை கடனுக்கு கொள்வனவு செய்தது. இக் கொடுக்கல் வாய்கல்களைப் பதிவு செய்யும் மூல ஏடு எது?

1) காசேடு 2) கொள்வனவு நாளேடு

3) விற்பனை நாளேடு 4) பொதுநாட்குறிப்பேடு

27. தளபாடங்களை விற்பனை செய்யும் ராகுல் கடந்த மாதத்தில் ஒரு மேசை ரூ.1000 வீதம் 50 மேசைகளை 10% வியாபார கழிவுடன் விற்பனை செய்துள்ளார். சகல விற்பனைகளும் கடனுக்கே மேற்கொள்ளப்பட்டன. கடன்பட்டோரிடமிருந்து அவருக்கு ரூ.43000 கிடைத்துள்ளது. மிகுதி கழிவாக வழங்கப்பட்டது. கடந்த மாதத்தில் அவரது வணிகத்தின் விற்பனை

1) ரூ.50000 2) ரூ.45000 3) ரூ.43000 4) ரூ.55000

28. தளபாட திருத்தச் செலவு, தளபாடக் கணக்கில் வரவில் பதியப்பட்டமை எவ்வகையான வழுவாகும்?

1) மாற்றீட்டு வழு 2) கோட்பாட்டு வழு

3) ஈடுசெய்யும் வழு 4) ஏற்படுத்தப்பட்ட வழு

29. சம்பளம் செலுத்தியது ரூ.4000 சம்பள கணக்கில் ரூ.400 என பதியப்பட்டுள்ளது. இதனால் பரீட்சை மீதியில் ஏற்படும் பாதிப்பு

1) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.3600 ஆல் அதிகரிக்கும்

2) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.4000 குறைந்திருக்கும்

3) பரீட்சை மீதியின் செலவு பக்கம் ரூ.3600 ஆல் குறைந்திருக்கும்

4) பரீட்சை மீதியின் வரவு பக்கம் ரூ.3600 ஆல் குறைந்திருக்கும்

30. கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்பிலிடப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைகளினது பெறுமதிகளைப் பதிவு செய்யும் முறை

1) மறுக்கப்பட்ட காசோலை க/கு வரவு

கடன்பட்டோர் க/கு செலவு

2) வங்கி க/கு வரவு

கடன்பட்டோர் க/கு செலவு

3) கடன்பட்டோர் க/கு வரவு

வங்கி க/கு செலவு

4) கடன்பட்டோர் க/கு வரவு

மறுக்கப்பட்ட காசோலை க/கு செலவு

31. வணிகமொன்றின் சில்லறைக் காசேட்டின் வசக்கட்டு ரூ.4500. குறித்த ஒரு மாதத்தின் செலவுத் தொகை ரூ.4100 எனின் மீள் நிரப்பும் தொகை யாது?

1) ரூ. 4500 2) ரூ. 8600 3) ரூ. 4100 4) ரூ. 400

32. தொங்கல் கணக்கு தொடர்பாக சரியான கூற்று

1) வரவு மீதியாகும்
2) செலவு மீதியாகும்
3) வெளிக்காட்டா வழுக்கள் காரணமாக தோற்றுவிக்கப்படும்
4) வரவு மீதியாக அல்லது செலவு மீதியாகக் காணப்படும்

33. காசேட்டின்படி வங்கி மீதி ரூ. 12000. வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி ரூ. 9000. ரூ.3000 வேறுபாட்டைத் தோற்றுவித்த காசோலை

1) மாற்றப்படாத காசோலை 2) வசூலிக்கப்படாத காசோலை
3) நேரடி வைப்பு செய்த காசோலை 4) மறுக்கப்பட்ட காசோலை

34. உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துவது.

1) சரக்குப்பற்று 2) காசுப்பற்று 3) இலாபம் 4) நட்டம்

35. நடைமுறையல்லாப் பொறுப்பாக கூறக்கூடியது.

1) மூலதனம் 2) வங்கிக்கடன்
3) பெற்ற தரகு 4) செலுத்த வேண்டியவ வட்டி

36, 37, 38 ஆம் வினாக்களுக்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

01.01.2016 இல் கடன் விற்பனை ஒன்று ரூ.30 படி 100 புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன. வியாபாரக் கழிவு 20%. ஒரு மாத காலத்தில் பணம் தீர்க்கப்பட வேண்டும். 10 நாட்களுக்குள் செலுத்தும்போது 5% காசுக்கழிவு அனுமதிக்கப்படும். 08.01.2016 இல் கடன்பட்டோரிடமிருந்து காசு பெறப்பட்டது.

36. பெற்ற காசும், அனுமதித்த கழிவும் முறையே

1) ரூ. 2280, ரூ. 120 2) ரூ. 2400, ரூ. 600
2) ரூ. 3000, ரூ. 600 4) ரூ. 2400, ரூ. 120

37. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் முறையே.

1) விற்பனை பட்டியல், பற்றுச் சீட்டு
2) கிரயப் பட்டியல், கைச்சாத்து
3) பொதுநாட்குறிப்பேட்டு கைச்சாத்த, பற்றுச்சீட்டு
4) விற்பனைப்பட்டியல், கைச்சாத்து

38. கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசையும் அனுமதித்த கழிவையும் பதிவு செய்வதற்குரிய இரட்டைப்பதிவு

1) காசுக் க/கு வரவு ரூ.2280
அனுமதித்த கழிவு க/கு வரவு ரூ.120
கடன்பட்டோர் க/கு செலவு ரூ.2400

2) காசுக் க/கு வரவு ரூ.2400
கொடுத்த கழிவு க/கு வரவு ரூ.600
கடன்பட்டோர் க/கு செலவு ரூ.3000

3) காசுக் க/கு வரவு ரூ.2400
அனுமதித்த கழிவு க/கு வரவு ரூ.120

கடன்பட்டோர் க/கு செலவு ரூ.2520

4) காசுக் க/கு வரவு ரூ.3000

அனுமதித்த கழிவு க/கு வரவு ரூ.600

கடன்பட்டோர் க/கு செலவு ரூ.3600

39. வணிகத்தின் உரிமையாளரான கணபதி கடன்கொடுத்தோரான பசுபதி என்பவருக்கு தனத சொந்த வங்கிக் கணக்கில் இருந்து ரூ.5000 கொடுப்பனவு செய்தார். இக் கொடுக்கல் வாங்கல் காரணமாக வணிகத்தின்

1) சொத்துக்களும் உரிமையும் அதிகரிக்கும்
2) பொறுப்புக்களும் உரிமையும் அதிகரிக்கும்
3) பொறுப்பு குறையஉரிமை அதிகரிக்கும்
4) சொத்து குறைய உரிமை அதிகரிக்கும்

40. வங்கிகணக்கிணக்கக்கூற்றைத் தயாரிக்கும் போது பன்படுத்தப்படும் ஓர் பிரதான உருப்படி பின்வருவனவற்றுள் எது?

1) காசோலை புத்தக கட்டணம்
2) வங்கி கட்டணம்
3) நேரடி வைப்புக்கள்
4) மாற்றப்படாத காசோலைகள்